தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பதினாறாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 24 MAR 2020)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பதினாறாவது அறிக்கை

"உயர் கல்வி" குறித்து 2007–2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதின்மூன்றாவது பேரவை) பேரவைக்கு அளித்த பத்தொன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான அறிக்கை.

பொருளடக்கம்

		பக்கங்கள்
2018–2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு	...	iii
I. முன்னுரை	...	v
II. அறிக்கை	...	vii

III. இணைப்புகள்

இணைப்பு – 1	நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்றவை	1–14
இணைப்பு – 2	துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றவை	15–32
இணைப்பு – 3	குழு மேலும் தொடர விரும்புபவை	33–37

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு (2018–2020)
(பதினைந்தாவது பேரவை)

(5.7.2018–ஆம் நாள் அமைக்கப்பெற்று 31.03.2020 வரை நீட்டிக்கப்பட்டது)

தலைவர்

1. திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்,
துணை முதலமைச்சர் (அலுவல் காரணமாக)
3. திரு. துரைமுருகன்,
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
4. திரு. S. செம்மலை,
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)
5. திரு. C.V. இராஜேந்திரன்
6. திரு. இ. கருணாநிதி
7. திரு. ஆர். காந்தி
8. திரு. V.S. காளிமுத்து
9. திருமதி ப. சத்யா
10. திரு. சி. சந்திரசேகரன்
11. திரு. எஸ்.எஸ். சரவணன்
12. திரு. M. செல்வராசு
13. திரு. அ. நடராஜன்
14. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்
15. முனைவர் க. பொன்முடி
16. திரு. கி. மாணிக்கம்
17. திரு. M.K. மோகன்
18. திரு. வி.ஜி. ராஜேந்திரன்
19. திரு. வாகை சந்திரசேகர்

செயலகம்

திரு. கி. சீனிவாசன் . . செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள் . . இணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

I. முன்னுரை

"உயர் கல்வி" குறித்து 2007–2008–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) 5.5.2008–ஆம் நாளன்று பேரவைக்கு அளித்த பத்தொன்பதாவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான பதினாறாவது அறிக்கையை குழு 2018–2020 (பதினைந்தாவது பேரவை) அதிகாரம் அளித்தவாறு மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

குழு 19.3.2020–ஆம் நாளன்று சென்னையில் கூடி மேலே பத்தி 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைப் பட்டியலை ஆய்வு செய்து இவ்வறிக்கைக்கு ஒப்புதல் அளித்தது.

குழுவின் பணிகளுக்கு பெரிதும் உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சென்னை – 600 009,
நாள்: 19.3.2020,
விகாரி, பங்குனி–6,
திருவள்ளுவர் ஆண்டு–2051.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

II. அறிக்கை

"உயர் கல்வி" குறித்து 2007–2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதின்மூன்றாவது பேரவை) பேரவைக்கு அளித்த பத்தொன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

******

1. 2007–2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த பத்தொன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள 56 பரிந்துரைகளில் 24 பரிந்துரைகள் அரசால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பெறுகின்றன. அவை இணைப்பு 1–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

27 பரிந்துரைகள் குறித்து அரசு அளித்துள்ள பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கின்றன. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு 2–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

5 பரிந்துரைகள் மீது அரசு மேலும் நடவடிக்கை தொடர வேண்டுமென குழு முடிவு செய்துள்ளது. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு 3–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

2. இணைப்பு 3–இல் கண்டுள்ள குழு தொடர விரும்பும் பரிந்துரைகள் மீது துறை உரிய நடவடிக்கை எடுத்து 2 மாத காலத்திற்குள் விவர அறிக்கை அனுப்பப்படவேண்டுமென்று குழு விரும்புகிறது.

சென்னை – 600 009,
நாள்: 19.3.2020,
விகாரி, பங்குனி–6,
திருவள்ளுவர் ஆண்டு–2051.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

III. இணைப்புகள்

இணைப்பு – 1

நிறைவேற்றப் பெற்றதாக கருதப்பெற்ற பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	8	25	கல்வி (2008–2009) ஆண்டில், புதியதாக கணினிகள் வழங்கப்படும்போது அரசு கல்லூரிகளுக்கு முன்னுரிமை அளித்து நவீன கணினிகள் Updated configuration உடன் வழங்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	2007–2008 ஆம் கல்வியாண்டில் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்ட கணினிகள் அனைத்தும் நவீன கணினிகள் (Updated configuration) ஆகும். அவ்வாறே, 2008–2009 முதல் 2018–2019 வரை கல்லூரிகளுக்கு நவீன கணினிகள் (Updated configuration) வழங்கப்பட்டுள்ளன. எனவே, குழுவின் பரிந்துரை நிறைவு செய்யப்பட்டுள்ளது. (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.
2	9	26	அவ்வாறு கணினிகள் வழங்கப்படும்போது, அவற்றுக்கான மேசை மற்றும் நாற்காலிகளும் சேர்த்து வாங்கி வழங்கப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.		

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	69 அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிக்குத் தேவையான கணினி தளவாடங்கள் தேவைப் பட்டியல் கோரப்பட்டு, அரசாணை(நிலை) எண் 214, உயர்கல்வித்(டி1) துறை நாள். 17.10.2013 இன் வாயிலாக 4614 கணினி மேசைகள் மற்றும் 5950 கணினி நாற்காலிகள் வாங்கப்பட்டு மாணவ, மாணவியர்கள் பயனடைந்து வருகின்றனர். (உயர் கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	12	34	திருவண்ணாமலை அரசினர் கலைக் கல்லூரியில் வரும் கல்வி ஆண்டில் (2008–2009) பி.எஸ்.சி (கணினி அறிவியல்) மற்றும் எம்.ஏ (தமிழ் இலக்கியம்) ஆகிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட வேண்டுமென்றும், இப்பாடப் பிரிவுகள் தொடங்கப்படும் போதே அவற்றுக்கான ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு நிரப்பப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது. இது பற்றி குழுவிற்கு அறிக்கை ஒன்று அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	திருவண்ணாமலை அரசினர் கலைக் கல்லூரியில் 2008–2009 ஆம் கல்வியாண்டில் பி.எஸ்.சி. கணினி அறிவியல் பாடப்பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. மேலும் இக்கல்லூரிக்கு பி.எஸ்.சி. கணினி அறிவியல் பாடப்பிரிவிற்கு 2 விரிவுரையாளர் பணியிடமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் இக்கல்லூரியில் 2010-2011 கல்வியாண்டு முதல் முதுநிலை கணினி அறிவியல் (எம்.எஸ்.சி. கணினி அறிவியல்) பாடப்பிரிவும் 2011–2012 ஆம் கல்வியாண்டு முதல் முதுகலை தமிழ் (எம்.ஏ தமிழ்) பாடப்பிரிவும் தொடங்கப்பட்டு ஆசிரியர் பணியிடங்களும் உருவாக்கப்பட்டு பாடப்பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. (உயர் கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	13	35	வேலூர் மாவட்டம், குடியேற்றம் அரசினர் திருமகள் ஆலை கல்லூரியில் எம்.சி.ஏ பாடப்பிரிவு வரும் கல்வியாண்டில் (2008–2009) துவங்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இக்கல்லூரியில், சுயநிதி முறையில் நடத்தப்பட்டு வந்த எம்.சி.ஏ. பட்டமேற்படிப்பு, 2006–2007 முதல் முறையான பாடப்பிரிவாக மாற்றப்பட்டுள்ளது. (உயர் கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	14	38	தற்போது, மேற்படி 542 கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி துவங்கப்பட்டு விட்டதா என்பதையும், ஆம் எனில், அவை எப்போது கட்டி முடிக்கப்படும் என்பதையும் தெரிவிக்க வேண்டுமென குழு விரும்புகிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
2007–2008 ஆம் கல்வியாண்டில் 55 அரசு கல்லூரிகளில் 542 கூடுதல் வகுப்பறைகள் கட்டி முடித்து, கல்லூரி நிர்வாகங்களிடம் ஒப்படைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. (அரசாணை(நிலை) எண்.209 உயர்கல்வி(டி1) துறை நாள் 02.07.2007). (உயர் கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008, நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	15	40	கீழ் குறிப்பிட்ட கல்லூரிகளின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு அவற்றுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தரப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. 1. எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல். 2. ஈ.வெ.ரா. அரசு கலைக் கல்லூரி, திருச்சி. 3. மாமன்னர் அரசு கலைக் கல்லூரி, புதுக்கோட்டை. 4. அரசு கலைக் கல்லூரி, தருமபுரி. 5. அரசு மகளிர் கலைக் கல்லூரி, சேலம். 6. அரசு மகளிர் கலைக் கல்லூரி, கும்பகோணம்.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2007–2008 ஆம் ஆண்டில் திண்டுக்கல், எம்.வி.எம். அரசினர் மகளிர் கல்லூரிக்கு 4 கூடுதல் வகுப்பறைகள், திருச்சி, பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரிக்கு 18 கூடுதல் வகுப்பறைகள், மாமன்னர் கல்லூரிக்கு 10 கூடுதல் வகுப்பறைகள், தருமபுரி, அரசு கலைக் கல்லூரிக்கு 13 கூடுதல் வகுப்பறைகள், சேலம், அரசு மகளிர் கல்லூரிக்கு 10 கூடுதல் வகுப்பறைகள், கும்பகோணம், அரசு மகளிர் கல்லூரிக்கு 15 கூடுதல் வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. 2008–2009 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் திருச்சி, பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரிக்கு 20 கூடுதல் வகுப்பறைகள், புதுக்கோட்டை, மாமன்னர் கல்லூரிக்கு 5 கூடுதல் வகுப்பறைகள், சேலம், அரசு மகளிர் கல்லூரிக்கு 7 கூடுதல் வகுப்பறைகள், கும்பகோணம், அரசு மகளிர் கல்லூரிக்கு 12 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. (உயர் கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	16	43	மதுரை அருள்மிகு மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் தற்போது உள்ள கட்டிடங்கள் மிகவும் பழமையானதாகவும் மோசமான நிலையிலும் உள்ளதால் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட 20 வகுப்பறைகள் தவிர்த்து மேற்கொண்டும் கூடுதல் வகுப்பறைகள் இக்கல்லூரிக்கு வரும் கல்வி ஆண்டில் (2008–2009) கட்டித்தரப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2008–2009 ஆம் ஆண்டு நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் மதுரை, அருள்மிகு மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரியில் 13 கூடுதல் வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. (உயர் கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	17	45	மேற்படி 10 கல்லூரிகளிலும் ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுவிட்டதா என்பது குறித்து குழுவிற்கு தெரிவிக்க வேண்டும் என குழு விரும்புகிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2007–2008 ஆம் நிதியாண்டில் பகுதி II திட்டம் கீழ் 10 ஆய்வகங்கள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண்.129, உயர்கல்விடி1 துறை, நாள் 28.05.2007 வாயிலாக ஆணைகள் வழங்கப்பட்டு இதில் 9 ஆய்வுக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கும் கொண்டு வரப்பட்டுள்ளன. அரசாணை(நிலை) எண்.9, உயர்கல்வித்(டி1) துறை, நாள் 11.01.2011 வாயிலாக 1 ஆய்வுக் கூடம் கட்டுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டு, பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளன. (உயர் கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	18	49	கரூர், அரசு கலைக் கல்லூரிக்கு, எம்.எஸ்.சி (இயற்பியல்) மற்றும் எம்.எஸ்.சி (விலங்கியல்) ஆகிய பாடப்பிரிவுகளுக்குத் தேவைப்படும் ஆய்வுக் கூடங்கள் வரும் கல்வி ஆண்டில் (2008–2009) முன்னுரிமை அடிப்படையில் அமைத்துத்தரப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2008–2009 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை அரசால் தாக்கல் செய்யப்பட்ட அரசின் அறிவிப்புகள் நிறைவு பெற்று விட்ட நிலையில் கரூர், அரசு கலைக் கல்லூரிக்கு கூடுதல் ஆய்வகங்கள் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. (உயர் கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	19	52	மாணவர்களின் பாதுகாப்பினைக் கருதி சுற்றுச்சுவர் அனைத்துக் கல்லூரிகளுக்கும் கட்டித்தரப்பட வேண்டுமென்றும் மகளிர் கல்லூரிகளுக்கு முன்னுரிமை அளித்து சுற்றுச்சுவர் கட்டித் தரப்படவேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2008–2009 ஆம் ஆண்டிற்கான 12 அரசினர் மகளிர் கல்லூரிகளுக்கு சுற்று சுவர் கட்டுவதற்கு அரசாணை(நிலை) எண். 222 உயர்கல்வி(டி1) துறை நாள் 11.06.2008 மற்றும் அரசாணை(நிலை) எண்.348, உயர்கல்வி(டி1) துறை, நாள் 20.08.2008 வாயிலாக அரசாணை வழங்கப்பட்டு சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் நிறைவுற்று பயன்பாட்டில் உள்ளது. (உயர் கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	20	56	தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கும் மற்றும் கும்பகோணம் அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கும் முன்னுரிமை அளித்து கூடுதல் கழிப்பறை வசதிகள் வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கல்லூரிக்கு 50 மீட்டர் சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கும்பகோணம் அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. (உயர் கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	குழுவின் பரிந்துரைக்கு துறையால் தொடர்பு இல்லாத தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அரசாணை எண் 450 உயர்கல்வித் துறை, நாள் 13.11.2008–இல் சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பறை வசதி செய்து தர நிதியொதுக்கீடு செய்யப்பட்டு தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கல்லூரிக்கு கூடுதலாக 3 கழிப்பறைகளும், கும்பகோணம் அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கு 4 கழிப்பறைகளும் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன என குழு அறிகிறது நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
12	22	60	கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக கல்லூரிக்கு புதியதாக விடுதி கட்டித்தரப்பட வேண்டுமென்றும் தற்போதுள்ள விடுதிக்கு சுற்றுச்சுவர் உடனடியாக கட்டித்தரப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.	கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகக் கல்லூரியின் விடுதிக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு அரசாணை (2டி) எண்.80, உயர்கல்வி (கே1)த் துறை, நாள் 20.08.2009-இன் படி ரூ.10.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இந்த நிதியில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுவிட்டது. (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
13	29	76	குறிப்பாக, திருச்சி ஈ.வெரா அரசு கலைக் கல்லூரிக்கு விடுதி வசதியே இல்லை என்ற நிலையில், முன்னுரிமை அடிப்படையில் அக்கல்லூரிக்கு விடுதி வசதி ஏற்படுத்தித் தர துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.	திருச்சி, ஈ.வெரா. அரசு கல்லூரியுடன் இணைந்த விடுதி 281 மாணவர்களுடன் தற்போது இயங்கி வருகிறது. மேலும், நலத்துறை விடுதிகளும் கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
14	30	79	குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தொகை செலுத்தப்பட்டு, திண்டுக்கல் எம்.வி. முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரிக்கு, தற்போது வாரியத்தால் குடிநீர் வழங்கப்படுகிறதா என்பது குறித்து குழுவிற்குத் தெரிவிக்க வேண்டும்.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
திண்டுக்கல் எம்.வி. முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரிக்கு திண்டுக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வசதி பெற அரசாணை (நிலை) எண் 364, உயர்கல்வி(ஜி1) துறை, நாள் 11.11.2010 வாயிலாக அரசாணை வழங்கப்பட்டு பணிகள் முடிந்து பயன்பாட்டில் உள்ளது. (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
15	32	84	பெஞ்ச் மற்றும் டெஸ்க் தேவைப்படும் கல்லூரிகள் குறித்து ஒரு ஆய்வினை மேற்கொண்டு, விரைவில் அக்கல்லூரிகளுக்கு அவை வழங்கப்படுவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
69 அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரி முதல்வர்களிடமிருந்து கல்லூரிக்குத் தேவையான தளவாடங்கள் தேவைப் பட்டியல் கோரப்பட்டு, அரசாணை(நிலை) எண் 71, உயர்கல்வித்(டி1) துறை, நாள். 29.04.2013 –இன் வாயிலாக ரூ.100 கோடி திட்டம் வாயிலாக 11553 எண்ணிக்கையிலான மாணவர்கள் அமரும் டெஸ்க் மற்றும் பெஞ்ச் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை(நிலை) எண் 254, உயர்கல்வி(டி) துறை, நாள். 31.08.2017-இன் வாயிலாக 14 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 1893 மாணவர்கள் அமரும் டெஸ்க் மற்றும் பெஞ்ச் டான்சி நிறுவனம் மூலம் கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்பட்டு மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
16	33	85	அரசு கல்லூரிகளில் கூடுதலாக வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டப்படுவதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்யும்போதே புதியதாக கட்டப்படும் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்களில் மாணவ / மாணவியர் அமருவதற்கு தேவையான பெஞ்ச் மற்றும் டெஸ்க் ஆகியவை வாங்குவதற்குத் தேவைப்படும் நிதியினையும் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
அரசாணை(நிலை) எண். 31, உயர்கல்வித்(டி1) துறை, நாள் 23.02.2015–இன் வாயிலாக 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குத் தேவையான ஆய்வகத் தளவாடங்கள் தேவைப் பட்டியல் கோரப்பட்டு, ரூ. 100 கோடி திட்டம் வாயிலாக இயற்பியல் , வேதியியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் ஆய்வகங்களுக்கு பின்வருமாறு தளவாடங்கள் வழங்கப்பட்டுள்ளது. இயற்பியல் ஆய்வகம் 1. Teak wood work table – 57 2. Ancillary Table – 57 3. Teak wood Stool -228 வேதியியல் ஆய்வகம் 1. Teak wood work table -57 2.Ancillary Table -57 3.Teak wood Stool – 228 தாவரவியல் ஆய்வகம் 1. Teak wood work table -49 2.Ancillary Table -49 3.Teak wood Stool – 196 விலங்கியல் ஆய்வகம் 1. Teak wood work table -45 2.Ancillary Table -45 3.Teak wood Stool – 180 (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
17	34	88	ரூ.75.00 இலட்சம் செலவில் மேற்காணும் மூன்று கல்லூரிகளில் அமைக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்ட மொழி ஆய்வுக் கூடங்கள் தற்போது செயல்பட துவங்கிவிட்டதா என்பது குறித்தும் 25 கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள மொழிப் பயிற்சிக் கூடங்களும் செயல்படத் துவங்கிவிட்டதா என்பது குறித்தும் குழுவிற்கு தெரிவிக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
முதற்கட்டமாக மூன்று அரசுக் கல்லூரிகளில் ரூ.60.00 இலட்சம் மதிப்பிலான மொழியியல் ஆய்வகங்கள் பொதுப்பணித் துறையினரால் கட்டப்பட்டு, ரூ.15.00 இலட்சம் மதிப்பிலான மொழியியல் ஆய்வக உபகரணங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இது தவிர இரண்டாவது கட்டமாக அரசாணை(நிலை) எண். 88, உயர்கல்விவிடி1) துறை, நாள் 20.03.2008 வாயிலாக அரசாணை வழங்கப்பட்டு மேலும், 60 அரசுக் கல்லூரிகளில் மொழி பயிற்சி கூடங்கள் அமைக்கப்பட்டு அவையும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
18	36	93	எனவே, வரும் கல்வி ஆண்டிற்குள் (2008–2009) அரசுக் கலைக் கல்லூரிகளில் காலியாக உள்ள நூலகர் பணியிடங்களை நிரப்பவும், நூலகர் பணியிடம் இல்லாத கல்லூரிகளுக்கு நூலகர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு அவற்றை நிரப்பவும் துறை, போர்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்து துறை ஒரு அறிக்கையினையும் குழுவிற்கு உடனே அளிக்க வேண்டும்.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1996–2009 ஆண்டுகளுக்கான கல்லூரி நூலகர் காலிப் பணியிடங்களில் 26 கல்லூரி நூலகர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டுகளில் கல்லூரிக் கல்வித் துறையில் பணியாற்றி வரும் 20 அமைச்சுப் பணியாளர்களுக்கு பணிமாறுதல் மூலம் கல்லூரி நூலகராக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. சிதம்பரம், அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் 4 மிகை நூலகர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் அரசாணை(நிலை) எண். 363, உயர்கல்வி(எச்1) துறை, நாள் 27.12.2017 அரசாணையின்படி பணியமர்த்தப்பட்டுள்ளனர். (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
19	38	98	மின்னணு நூலகங்களில் 24 மணி நேரமும் மற்றும் கிராமப்புறங்களிலும் தொலைத் தொடர்பு வசதி மாணவர்களுக்கு கிடைக்கும் வகையில் இணையதள வசதி வழங்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தற்போது கணினி அறிவியல் பாடப்பிரிவு பெரும்பாலான அரசுக் கல்லூரிகளில் நடைபெற்று வருகிறது. இப்பாடப்பிரிவு நடத்தப்படும் கல்லூரிகளில் இணையதள வசதி ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
20	41	102	திருப்பூர் சிக்கண்ணா அரசுக் கலைக் கல்லூரி வளாகத்தில் உள்ள மைதானத்தை அங்குள்ள புதர்களை நீக்கி நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானமாக அமைத்துத் தர இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2008–2009 ஆம் ஆண்டின் பகுதி -2 திட்டத்தின் கீழ் திருப்பூரில் ரூ.1.00 கோடி செலவில் பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் கட்டுவதற்கு அரசின் பங்கீட்டுத் தொகையாக ரூ. 50.00 இலட்சம் (தொராச் செலவினமாக) ஒப்பளிப்பு செய்து அரசாணை (நிலை) எண்.21, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 23.5.2008 வாயிலாக ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது. மீதமுள்ள தொகை ரூ.50.00 இலட்சம் அல்லது அதற்கு மேல் ஆகும் செலவினத் தொகையினை பொதுமக்கள் மற்றும் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து திரட்டப்படும் என குறிப்பிடப்பட்டது. அதற்கான திட்ட மதிப்பீடு பெறப்பட்டு, மதிப்பீட்டு சூர்ந்தாய்வு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையிடம் வசம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் பல்நோக்கு உள்விளையாட்டரங்க கட்டுமான பணிகள் அனைத்தும் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது. பொது மக்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
21	47	127	பல்வேறு கல்லூரிக் கட்டடங்கள் 25 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்டவை என்பதாலும், பல கல்லூரிக் கட்டடங்கள் இடிபாடுகளுடன் மோசமான நிலையில் இருப்பதாலும், பராமரிப்புக்கென ஒதுக்கப்படும் நிதியை, ரூ.20.00 கோடியிலிருந்து ரூ.30.00 கோடியாக உயர்த்தித்தர வேண்டும் என்றும், அப்போதுதான் பழுதுபார்க்கும் பணிகளை ஒரே சமயத்தில் சிறப்பாக செய்து முடிக்க முடியும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
2008–2009 ஆம் ஆண்டில் அரசுக் கல்லூரிகளின் பராமரிப்பு செலவினங்களுக்காக ரூ.13.60கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், கழிப்பறைகள், கற்றுக்கவர்கள் ஆகியவை சிறப்பான முறையில் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நிறைவடைந்தன.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
22	48	130	எனினும், தருமபுரி மாவட்டத்தில் மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்டோர் 40 சதவீதமும், பிற்பட்டோர், மிகப்பிற்பட்டோர் 55 சதவீதமும் வாழும் மொரப்பூர், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி ஒன்றியங்களின் மையப்பகுதியாக உள்ள மணியம்பாடி ஊராட்சிக்குட்பட்ட ஒடசல்பட்டி கூட்ரோடு அல்லது மொரப்பூர் கம்பைநல்லூர் சாலையில் நவலை ஊராட்சியில் சமத்துவபுரம் பகுதியில் நிலம் தேவையான அளவு கிடைக்கும் என்பதால் இப்பகுதியில் வரும் கல்வியாண்டில் (2008–2009) அரசு பொறியியல் கல்லூரி துவங்கிட குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தருமபுரி மாவட்டம், செட்டிக்கரையில் ஒரு புதிய அரசு பொறியியல் கல்லூரி துவங்க, அரசாணை (நிலை) எண்.11, உயர்கல்வி (ஜே2) துறை, நாள் 30–1–2013 மூலம் அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டு, மேற்கண்ட இடத்தில் ஒரு புதிய அரசு பொறியியல் கல்லூரி துவங்கப்பட்டு 2013–2014–ஆம் கல்வியாண்டு முதல் செவ்வனே இயங்கி வருகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
23	50	138	அனைத்து அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, வரும் கல்வி ஆண்டில் (2008–2009) மாற்றுமுறையில் பட்டயப் பாடப்பிரிவுகள் நடத்த அரசு அனுமதி வழங்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
குழுவின் பரிந்துரைப்படி, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணாக்கர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, கழற்சிமுறையில் பட்டயப் பாடப்பிரிவுகள் நடத்த ஏதுவாக, 14 அரசு பலவகைத் தொழிநுட்பக் கல்லூரிகளில் கழற்சி முறையில் பட்டயப் படிப்பு படிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கிராமபுரம், மற்றும் நகர்புரத்தில் உள்ள ஏழை, எளிய நடுத்தர மாணவர்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் இத்திட்டம் 14 அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 3360 மாணவர்கள் சேர்க்கை அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (அரசாணை(நிலை) எண்.53, உயர்கல்வித்(பி2) துறை, நாள் 02.03.2009) (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
24	51	141	கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசினர் பொறியியல் கல்லூரிக்குக் கூடுதலாக விடுதி கட்டடம் கட்டித்தரும் பணி விரைவில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசினர் பொறியியல் கல்லூரிக்கு, 2009-2010 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய மகளிர் விடுதி கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. (அரசாணை(நிலை) எண். 288, உயர்கல்வித்(பி2) துறை, நாள் 03.08.2009) (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இணைப்பு – 2

பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றவை

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	4	12	தருமபுரி மாவட்டம், மொரப்பூர் வட்டத்தில் மிக அதிக அளவில் தொடக்கநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் உள்ளதா ? அப்பகுதியில் அரசு கலைக் கல்லூரி ஒன்று வரும் கல்வியாண்டில் (2008–2009) துவங்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் 04.08.2006 அன்று தமிழக சட்டப் பேரவையில் ஆற்றிய பதில் உரையின் போது புதிய கல்லூரி தொடங்குவது தொடர்பாக கல்லூரி செயல்படுவதற்காக 5.00 ஏக்கர் நிலமும், ஒரு கோடி ரூபாய் நிதியும் தமிழக அரசிடம் ஒப்படைத்தால் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது தொடர்பாக பரிசீலிக்க இயலும் என அறிவித்திருந்தார். தருமபுரி மாவட்டம் மொரப்பூர் வட்டத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்க முறையான விண்ணப்பத்தினை அரசுக்கு சமர்ப்பித்து அரசு தற்போது கல்லூரி தொடங்குவது தொடர்பாக தெரிவித்துள்ள நிபந்தனைகளை முழுமையாக நிறைவு செய்ததற்குரிய உறுதி மொழியினையும் அளித்து விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் தேவையின் அடிப்படையில் அரசு உரிய பரிசீலனை மேற்கொள்ளும். தற்போது தருமபுரி மாவட்டத்தில் 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 21 சுயநிதி கல்லூரிகள் மற்றும் 2 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இவை அம்மாவட்டத்திலுள்ள மாணவ/மாணவியரின் உயர்கல்வித் தேவையை பூர்த்தி செய்கின்றன. (அரசாணை(நிலை) எண். 35 உயர்கல்வித்(ஜி1) துறை, நாள் 08.02.2011) (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2 மற்றும் 3	5 மற்றும் 6	15 மற்றும் 16	இரண்டாவது சுற்று கலந்தாலோசனை (Counselling) முறையில் காலியிடங்கள் நிரப்பப்படுவது குறித்து, விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் இதனை விளம்பரப்படுத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. அரசு கல்லூரிகளில், மாணவர்கள் வேறு படிப்பிற்காக இடையில் விட்டுச் செல்வதால் முதலாம் ஆண்டில் ஏற்படும் காலியிடங்களில், ஏற்கனவே விண்ணப்பித்துக் காத்திருப்பவர்களிலிருந்து இரண்டாவது சுற்று கலந்தாலோசனை (Counselling) முறையில் கண்டிப்பாக மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையின்போது, இரண்டாவது சுற்று கலந்தாலோசனை (Counselling) முறையில் காலியிடங்கள் நிரப்பப்படுவது குறித்து, விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் விளம்பரப்படுத்த வேண்டுமென்று அனைத்து அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி முதல்வர்களுக்கும் உரிய தெளிவுரை வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. (கல்லூரி கல்வி இயக்ககத்தின் கடிதம் ந.க.எண். 9987/எம்1/09, நாள் 30.06.2009) (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
4	7	20	தற்போது அனைத்து அரசு கல்லூரிகளிலும் மாற்றுமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால், ஒரு சிறப்புக்குழு அமைத்து, மொத்தத்தில் எவ்வளவு ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியிடங்கள் தேவை என்பதையும், தற்போது அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் எவ்வளவு என்பதையும் ஆய்வு செய்து கணக்கிட்டு கூடுதல் பணியிடங்களைத் தோற்றுவிக்கவும் அப்பணியிடங்களை நிரப்புவதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			தற்போது 59 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாற்றுமுறை வகுப்புகள் செயல்படுத்தப்பட்டு, அம்மாற்றுமுறை வகுப்புகளுக்கென மொத்தம் 1661 கௌரவ விரிவுரையாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர். மேலும், கல்லூரியில் உள்ள ஆசிரியரல்லாத பணியாளர்களே சுழற்சி 2–க்கான மாணவர்கள்/ஆசிரியர்களுக்கு பெற்று அளிக்கப்பட வேண்டிய கல்வி உதவித்தொகை, தொகுப்பூதியம் பெற்று வழங்குவது போன்ற அனைத்து பணிகளையும் மேற்கொள்கின்றனர். (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/எ2/2008 நாள் 27.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
5	10	30	எனவே, அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் தேவைப்படும் கணினி பாடப்பிரிவு ஆசிரியர்கள் குறித்து ஒரு கணக்கெடுப்பு நடத்தவும், தேவை அடிப்படையில் அதற்கான ஆசிரியப் பணியிடங்களை உருவாக்கவும் வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
		2000–2001 கல்வியாண்டில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், கணிப்பொறி அறிவியல் பாட வகுப்பு பயிலும் மாணவர்கள் தவிர பிற பாட வகுப்பு பயிலும் மாணவர்களும் பயன் பெறத்தக்க வகையில் கணினி அறிவு பயிற்சி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2005–2006 கல்வியாண்டு முதல் இத்திட்டம் சுய சார்பு திட்டமாக, அரசுக்கு எவ்வித செலவினமின்றி, கணிப்பொறி பயிலாத மாணவர்களின் விருப்பத்தின்படி, அம்மாணவர்களிடமிருந்து ரூ.700 வீதம் வசூலித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தில் இக்கணிப்பொறி பாடமானது நடைமுறை பாடமாகவும் கருத்தியல் பாடமாகவும் இருக்கும். 60 மணி நேர கருத்தியல் மற்றும் 90 மணிநேரத்தில் இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேரும் 50 மாணவர்களுக்கு ஒரு கணினி அறிவு பயிற்றுனரை நியமனம்	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

செய்து கொள்ளுமாறும் அவர்களுக்கு மாத ஊதியம் ரூ.4000 தொகைக்கு மேல் இருக்கக் கூடாது என்றும், அவர்களின் குறைந்தபட்ச கல்வித்தகுதி எம்.எஸ்.சி கணினி அறிவியல் / எம்.சி.ஏ/ பி.இ. கணினி அறிவியல் இருக்க வேண்டுமெனவும் கல்லூரி முதல்வர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மேலும், இப்பயிற்சி திட்ட காலம் செப்டம்பர் முதல் நவம்பர் வரை மற்றும் ஜனவரி முதல் மார்ச் வரை 6 மாதங்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தில் பயிற்சி அளிக்கும் பணியாளர்களுக்கு மாத ஊதியம், பொது தேர்வு நடத்துதல், சான்றிதழ் வழங்குதல் மற்றும் எழுதுபொருள் ஆகிய செலவினங்களை மாணவர் சேர்க்கையின் போது இப்பயிற்சிக்கென பெறப்படும் ரூ.700 தொகையிலிருந்து செலவு செய்து கொள்ள கல்லூரி முதல்வர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இத்தொகை கல்லூரியின் தன்வைப்பு கணக்கு-Iஇல் பராமரிக்கப்பட்டு வருகிறது.

கணினி பயிற்சி திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்கள், பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையிலோ, பல்கலைக்கழக மானியக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பணி பளு மற்றும் கல்வித் தகுதி அடிப்படையிலோ பணியாற்றவில்லை. இத்திட்டத்திற்கென தனியாக அரசால் பணியிடங்கள் ஏதும் ஒப்பளிக்கப்படவில்லை. தவிர மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில், 71 அரசு கல்லூரிகளில் இத்திட்டம் சுயசார்பு முறையில் செயல்படுத்தப்பட்டு வருவதால், இத்திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களை நிரந்தரம் செய்வது என்பது இயலாததாக உள்ளது.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/எ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
6	11	31	தற்போது பணியாற்றி வரும் ஒட்டு மொத்த சம்பளம் பெறும் ஆசிரியர்களுக்கு அவர்களின் அனுபவத்திற்கு முக்கியத்துவம் அளித்து சிறப்புத் தேர்வு நடத்தி அவர்களை பணிமூர்த்தவும் தற்போது உள்ள இதர கணினி பாடப்பிரிவு ஆசிரியர்களுக்கு குறுகிய கால பயிற்சி அளிக்கப்படவும் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

2000–2001 கல்வியாண்டில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், கணிப்பொறி அறிவியல் பாட வகுப்பு பயிலும் மாணவர்கள் தவிர பிற பாட வகுப்பு பயிலும் மாணவர்களும் பயன் பெறத்தக்க வகையில் கணினி அறிவு பயிற்சி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

2005–2006 கல்வியாண்டு முதல் இத்திட்டம் சுய சார்பு திட்டமாக, அரசுக்கு எவ்வித செலவினமின்றி, கணிப்பொறி பயிலாத மாணவர்களின் விருப்பத்தின்படி, அம்மாணவர்களிடமிருந்து ரூ.700 வீதம் வசூலித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தில் இக்கணிப்பொறி பாடமானது நடைமுறை பாடமாகவும் கருத்தியல் பாடமாகவும் இருக்கும். 60 மணி நேர கருத்தியல் மற்றும் 90 மணிநேரத்தில் இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேரும் 50 மாணவர்களுக்கு ஒரு கணினி அறிவு பயிற்றுனரை நியமனம் செய்துகொள்ளுமாறும் அவர்களுக்கு மாத ஊதியம் ரூ.4000 தொகைக்கு மேல் இருக்கக் கூடாது என்றும், அவர்களின் குறைந்தபட்ச கல்வித்தகுதி எம்.எஸ்.சி கணினி அறிவியல் / எம்.சி.ஏ/ பி.இ. கணினி அறிவியல் இருக்க வேண்டுமெனவும் கல்லூரி முதல்வர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மேலும், இப்பயிற்சி திட்ட காலம் செப்டம்பர் முதல் நவம்பர் வரை மற்றும் ஜனவரி முதல் மார்ச் வரை 6 மாதங்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தில் பயிற்சி அளிக்கும் பணியாளர்களுக்கு மாத ஊதியம், பொது தேர்வு நடத்துதல், சான்றிதழ் வழங்குதல் மற்றும் எழுதுபொருள் ஆகிய செலவினங்களை மாணவர் சேர்க்கையின் போது இப்பயிற்சிக்கென பெறப்படும் ரூ.700 தொகையிலிருந்து செலவு செய்து கொள்ள கல்லூரி முதல்வர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இத்தொகை கல்லூரியின் தன்வைப்பு கணக்கு-IIஇல் பராமரிக்கப்பட்டு வருகிறது.

கணினி பயிற்சி திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்கள், பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையிலோ, பல்கலைக்கழக மானியக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பணி பளு மற்றும் கல்வித் தகுதி அடிப்படையிலோ பணியாற்றவில்லை. இத்திட்டத்திற்கென தனியாக அரசால் பணியிடங்கள் ஏதும் ஒப்புளிக்கப்படவில்லை. தவிர மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில், 71 அரசு கல்லூரிகளில் இத்திட்டம் சுயசார்பு முறையில் செயல்படுத்தப்பட்டு வருவதால், இத்திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களை நிரந்தரம் செய்வது என்பது இயலாததாக உள்ளது.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)

குழுவின் குறிப்புரை
(6)

குழுவின் பரிந்துரை தற்போது பணியாற்றிவரும் ஒட்டுமொத்த சம்பளம் பெறும் ஆசிரியர்களுக்கு அவர்களின் அனுபவத்திற்கு முக்கியத்துவம் அளித்து சிறப்புத் தேர்வு நடத்தி அவர்களை பணியமர்த்துவது குறித்ததாகும். எனினும் துறை மேற்படி கணினிப் பயிற்சி சுயசார்பு முறையில் செயல்பட்டு வருவதால் அத்திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களை நிரந்தரம் செய்வது இயலாது என்று தெரிவித்துள்ளது. குழுவால் துறையின் பதில் ஏற்றுக்கொள்ளப்பெறலாம்.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	21	57	அரசு மகளிர் கலைக் கல்லூரிகளில் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும் என்று குழு கருதுகிறது. அரசினர் மகளிர் கலைக் கல்லூரிகள் அனைத்திலும் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் ஆகியவை வழங்குவது குறித்து அரசுச் செயலாளர் அளவில் ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்றும் இவ்வாய்வின் அடிப்படையில் அனைத்து மகளிர் அரசு கலைக் கல்லூரிகளிலும் மேற்படி வசதிகள் செய்யப்படுவதற்கு முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்து அறிக்கை ஒன்று குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு விரும்புகிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2008–2009 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க, 60 அரசு கல்லூரிகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்த அரசாணை(நிலை) எண்.450, உயர்கல்வித்(டி1) துறை, நாள் 13.11.2008 வாயிலாக அரசாணை வழங்கப்பட்டு, 188 நவீன கழிப்பறை வசதிகள், 18 அரசு மகளிர் கல்லூரி உட்பட ஏற்படுத்தி தரப்பட்டுள்ளன. இது தவிர குடிநீர் வசதிகளும் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளன. (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
8	23	63	கரூர் (காந்தோணிமலை) அரசு கலைக் கல்லூரியில் புதியதாக கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதிக்குப் பல்கலைக் கழக மானியக் குழு நிதியைப் பயன்படுத்தி குடிநீர் இணைப்பு உடன் வழங்கப்படவும் விடுதி செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படவும் வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கரூர் (காந்தோணிமலை) அரசு கலைக் கல்லூரியில் பல்கலைக் கழக மானியக் குழு நிதியைப் பயன்படுத்தி புதியதாக கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதிக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

விடுதியில் மாணவியர் சேர்க்கை குறைவாக உள்ளதால், கூடுதலாக முதல் தளம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
9	24	64	மேலும், புதியதாக கட்டப்பட்டுள்ள மேற்படி விடுதியில் 50 மாணவியர்கள் மட்டுமே தங்க இயலும் என்பதால் மேலும் 50 மாணவியர்கள் தங்கிப் படிக்க இதனை சிறப்பு நேர்வாகக் கருதி இந்த விடுதிக் கட்டடத்திலேயே முதல் தளம் கட்டித்தரப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கரூர் (தாந்தோணிமலை) அரசு கலைக் கல்லூரியில் பல்கலைக் கழக மானியக் குழு நிதியைப் பயன்படுத்தி புதியதாக கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதிக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. விடுதியில் மாணவியர் சேர்க்கை குறைவாக உள்ளதால், கூடுதலாக முதல் தளம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை. (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
10	25	67	திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி லோகநாத நாராயணசாமி அரசுக் கலைக் கல்லூரியில் தற்போதுள்ள விடுதி போதவில்லை என்பதால் கூடுதலாக விடுதி வசதி செய்து தரப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
பொன்னேரி உலகநாத நாராயணசாமி அரசுக் கல்லூரியில், தற்போது கல்லூரியுடன் இணைந்த விடுதி ஏதும் இல்லை. எனினும், இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களின் தேவைக்கு, ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் உள்ளன.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

கல்லூரியுடன் இணைந்த விடுதியில் தங்கி பயில மாணவரிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. விடுதியில் கட்டணம் செலுத்தி தங்கிட மாணவர்கள் முன்வராத நிலையில் சேர விரும்பும் ஒரு சில மாணவர்களை கொண்டு விடுதியை நடத்துவது என்பது இயலாததாகும்.

மேலும், கல்லூரி அமைந்துள்ள நகரிலிருந்து 40 கிலோ மீட்டர் வரை பேருந்து வசதி உள்ளதாலும் கல்லூரி மாணவர்கள் அனைவரும் இலவச பேருந்து பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதால் இவ்விடுதியில் தங்கும் மாணவர் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வகையில் இல்லை. எனவே, உரிய வகையில் செயல்படாத இவ்விடுதியின் செயல்பாட்டை மாநிலக் கணக்காயர் "பயனற்ற செலவினம்" என தணிக்கை மறுப்பு எழுப்பும் நிலை உருவாகலாம்.

இந்நிலையில், இவ்விடுதியில் தங்கி பயில மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டால் தேவையின் அடிப்படையில் அது குறித்து பரிசீலிக்கப்படும்.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
			(4)
11	26	70	வேலூர் மாவட்டம், குடியேற்றம் அரசினர் திருமகள் ஆலை கல்லூரி விடுதியில் தங்கி உள்ள இலங்கை அகதிகளை வரும் கல்வி ஆண்டிற்குள் (2008–2009) இடம் மாற்றம் செய்து அந்த விடுதியில் மாணவர்கள் தங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை துறை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்

(5)

குடியேற்றம் அரசினர் திருமகள் ஆலை கல்லூரி விடுதியில் சேருவதற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏதும் வரப்பெறாத நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின் பேரில் அவ்விடுதியில் இலங்கை அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். விடுதியிலிருந்து இலங்கை அகதிகளை வேறு இடம் மாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

மேற்காணும் கல்லூரியின் விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளை வேறு முகாம்களுக்கு மாற்ற தற்போது போதிய இடவசதி இல்லை எனவும், தனியார் வாடகை கட்டிடங்கள் கிடைக்கப் பெறவில்லை எனவும், எனவே, உடனடியாக அவர்களை அவ்விடுதியிலிருந்து மாற்ற இயலாது எனவும் வேறு முகாம்களில் போதிய இடவசதி கிடைக்கப் பெற்றால் அவர்களை வேறு முகாமிற்கு மாற்றம் செய்து கல்லூரி விடுதியை காலி செய்து கல்லூரியிடம் ஒப்படைக்கப்படும் என மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
12 மற்றும் 13	27 மற்றும் 28	74 மற்றும் 75	அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் ஒரு ஆய்வினை மேற்கொண்டு, எங்கெங்கு விடுதிகள் இல்லை என்பதையும், எங்கெங்கு தற்போதைய விடுதிகள் போதவில்லை என்பதையும் கண்டறிய வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. அந்த ஆய்வின் அடிப்படையில் தேவையுள்ள இடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறை ஆகிய துறைகளுடன் கலந்தாலோசித்து அத்துறைகள் மூலமாகவோ அல்லது பொதுப் பணித்துறை மூலமாகவோ விடுதிகள் கட்டித்தரப்பட உயர்கல்வித் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தற்போதுள்ள 69 அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 17 அரசு மகளிர் கல்லூரிகள் உட்பட 32 கல்லூரிகளில் விடுதி வசதி உள்ளது. சமையல் அறை, உணவுக் கூடத்துடன் கூடிய 1000 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள 100 மாணவ மாணவியர் தங்கும் வசதியுடன் கூடிய கல்லூரி விடுதி கட்டுவதற்கு ரூ.2.00 கோடி செலவாகும். தேவையின் அடிப்படையில், பல்கலைக் கழக மான்யக் குழு நிதி உதவி மற்றும் கல்லூரியின் நிதிக் குவியல் ஆகியவற்றை கொண்டு கல்லூரியுடன் இணைந்த விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலே தெரிவித்தவாறு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையினரால் இலவச விடுதிகள் கட்டப்பட்டு வரும் நிலையில், கல்லூரியுடன் இணைந்த விடுதிக்கான தேவைகள் கணிசமாக குறைந்து வருகின்றன. தவிர, அரசு கல்லூரிகளில் பயிலும் பெரும்பான்மையான மாணவியர் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவை சேர்ந்தவர்களாதலால் விடுதிக் கட்டணம் செலுத்தி விடுதியில் தங்கிட முன் வருவதில்லை. இந்நிலையில், விடுதியை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இக்குறைந்த எண்ணிக்கையுடன் விடுதியை நடத்துவது என்பது இயலாததாகிறது. மேலும், கல்லூரி அமைந்துள்ள நகரிலிருந்து 40 கிமீ வரை பேருந்து வசதி தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளதாலும் பட்ட வகுப்புகள் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் இலவச பேருந்து பயணம் அனுமதிக்கப்படுவதாலும் கல்லூரியுடன் இணைந்த விடுதிகளில் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. இந்நிலையில், கல்லூரியுடன் இணைந்த விடுதி செயல்படாத நிலையில் அதனை மாநிலக் கணக்காயர் ''பயனற்ற செலவினம்' என தணிக்கை மறுப்பில் சுட்டிக் காட்டும் நிலை எழும். (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
14	35	89	குறைந்த செலவில் அதாவது தோராயமாக ரூ.3.00 இலட்சம் செலவில் மற்ற அரசுக் கல்லூரிகளிலும் மொழிப்பயிற்சிக் கூடம் அமைக்கப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
அரசாணை(நிலை) எண்.88, உயர்கல்வித்(டி1) துறை நாள். 20.03.2008 வாயிலாக, 6 அரசுக் கல்லூரிகளில் மொழி பயிற்சிக் கூடங்கள் அமைப்பது தொடர்பாக அரசாணை வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் மொழியியல் ஆய்வகங்கள் அமைந்து அவற்றிற்கான உபகரணங்களும் வாங்கப்பட்டு இவை தற்போது பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
15	37	97	ஏற்கனவே மின்னணு நூலகங்கள் 13 கல்லூரிகளில் அமைக்கப்பட்டுள்ளன என்பதை குழு அறிவதுடன் மற்ற அரசுக் கல்லூரிகளிலும் மின்னனு நூலகங்கள் படிப்படியாக அமைக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
அரசாணை (நிலை) எண். 154, உயர்கல்வித்(டி1) துறை, நாள். 21.06.2017-இன் வாயிலாக 26 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு நூலகங்களை கணினிமயமாக்குவதற்கு, கணினி வன்பொருட்கள் மற்றும் நூலக மென் பொருட்கள் வாங்குவதற்கு ஆணை வழங்கப்பட்டு எல்காட் வாயிலாக அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு வன்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
16	39	99	மின்னணு நூலகங்கள் முழுப் பயனையும் மாணவர்கள் பெறும் வகையில் அவற்றின் செயல்பாட்டினை செம்மையாக்குவதற்கான நடவடிக்கைகளைத் துறை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தற்போது கல்லூரிகளில் மாணவர்கள் தங்களுக்குத் தேவையான விவரங்களை மின்னணு நூலகத்திலுள்ள இணையதளத்தின் மூலம் தெரிந்து கொள்வதற்கு நகல்கள் எடுக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட பழைய நூல்களின் குறுந்தகடுப் பதிவுகள் மாணவர்களுக்கு நகலெடுத்துக் கொடுக்கப்பட்டு வருகிறது. (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
17	40	100	அனைத்து கல்லூரிகளிலும், மின்னணு தகவல் இதழ்களை (E-Magazine) மின்னணு தொழில்நுட்பம் பற்றிய அறிவினை வளர்த்துக் கொள்ள இயலும் வகையில் மாணவர்கள் படிப்பதற்காக வாங்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கல்லூரிக்கு 'புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள்' வாங்கிட ஒதுக்கப்படும் நிதியிலிருந்து முன்னுரிமை வழங்கி மின்னணு தகவல் தொடர்பான இதழ்களை வாங்கிட அனைத்து கல்லூரி முதல்வர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
18	42	108	அனைத்து கல்லூரிகளுக்கும் படிப்படியாக கலையரங்கம் கட்டித்தரப்பட துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	வரும் ஆண்டுகளில் கலையரங்கம் இல்லாத அரசு கல்லூரிகளில், நிதிநிலையை கருத்தில் கொண்டும் அவசியத்தின் அடிப்படையிலும் கல்லூரி முதல்வரிடமிருந்து கருத்துரு வரப்பெறின், அது குறித்து பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
19	44	112	தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டத்தின் பயன் உரியவர்களுக்குச் சென்று சேராததற்கு விளம்பரம் சரிவர செய்யப்படாதது ஒரு காரணமாக இருப்பினும், அரசின் வேறு நலத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவோர் இத்திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகை பெற இயலாது என்பதே முக்கிய காரணம் என்று குழு கருதுகிறது. எனவே தற்போது அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவின் ஆலோசனைகளின்படி நடவடிக்கை எடுத்து இத்திட்டத்தின்கீழ் அதிகளவில் மாணவர்கள் பயன்பெறச் செய்ய வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் / விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டத்தின் 2006 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தற்போது வருவாய்த் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(6)
20	45	113	இத்திட்டத்தின் கீழ் பயன்பெறக்கூடிய மாணவர் எண்ணிக்கை ஒரு கணக்கெடுப்பு மேற்கொண்டு தோராயமாக கணக்கிட்டு அதற்கு தகுந்தபடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் அதிக அளவில் நிதி செலவிடப்படாமல் சரண் செய்யப்படுவதை தவிர்க்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

துறையின் பதில்

(5)

2008–2009ஆம் ஆண்டு விவசாய தொழிலாளர் நலத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை சம்மந்தப்பட்ட கல்லூரிகளின் மூலம் தகுதியுள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவர் எண்ணிக்கை குறையும் பட்சத்தில், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் மீதம் ஏற்பட்டு சரண் செய்யும் நிலை எழுகிறது. இதனை கருத்தில் கொண்டு, 2009–2010–ஆம் நிதியாண்டில் இருந்து தேவையான அளவிற்கே நிதி ஒதுக்கீடு கோரப்பட்டு சரண் செய்யப்படுவது தவிர்க்கப்பட்டு உள்ளது.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
21	46	116	பெரியார் ஈ.வெ.ரா நாகம்மை நினைவு மகளிர் இலவச பட்டப்படிப்புதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகை ரூ.500 –ஐ ரூ.1,000/– ஆக உயர்த்தித் தர வேண்டும் என்றும், அதிக அளவில் மாணவிகள் பயன்பெறும் வகையில் பெற்றோரின் வருமான உச்சவரம்பை உயர்த்த வேண்டும் என்றும் இத்திட்டத்தின் கீழ் பட்டமேற்படிப்பிற்கும் உதவித் தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு (UG) பயிலும் அனைத்து மாணவியர்களுக்கும் அரசு நிர்ணயித்த கல்விக் கட்டணம் (Tuition Fees) ஈ.வெ.ரா. நாகம்மை நினைவு மகளிர் இலவச திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு வந்தது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவியர்களுக்கு கல்விக்கட்டணம், அரசாணை (நிலை) எண். 180, நாள் 02.07.2010 வாயிலாக இரத்து செய்து அரசாணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, பெரியார் ஈ.வெ.ரா நாகம்மை நினைவு மகளிர் இலவச பட்டப்படிப்புத் திட்டத்தின் கீழ் உதவித் தொகை உயர்த்துவது மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் மாணவியர்களுக்கு ஈ.வெ.ரா. நாகம்மை படிப்புதவித் தொகை வழங்கும் நிலை எழவில்லை.

குழுவின் குறிப்புரை
(6)
துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம் (4)
(1)	(2)	(3)	
22	49	135	அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் பரிந்துரைத்தவாறு, அரசு பொறியியல்/பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியிடங்களைப் புதியதாக தோற்றுவிக்கவும், ஏற்கனவே உள்ள பணியிடங்களில் காலியாக உள்ள பணியிடங்களையும் புதிய பணியிடங்களையும் நிரப்புவதற்கும் துறை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்து விரிவான அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அளிக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

அரசு பொறியியற் கல்லூரிகளிலும், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், நிரந்தர ஆசிரியர்கள் பணிபுரிந்தால், கல்வியின் தரம் உயரும். பொறியியற் கல்லூரிகளைப் பொருத்தவரை ஆசிரியர் தேர்வு வாரியம் 2017–இல் நடத்திய தேர்வின் மூலம் 190 உதவிப்பேராசிரியர்களும், அண்ணாமலை பல்கலைக்கழக மிகை ஆசிரியர்களைக் கொண்டு 113 உதவிப்பேராசிரியர்களும் ஆக மொத்தம் 303 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொறியியற் கல்லூரிகளைப் பொறுத்தவரை போதுமான உதவிப்பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

குழுவின் குறிப்புரை
(6)
துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

ஆனால், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்த வரை, 1058 காலிப்பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்ப 2017–இல் எடுக்கப்பட்ட நடவடிக்கை, நீதிமன்ற வழக்குகள் காரணமாக, நிலுவையில் உள்ளது. எனவே, பலவகை தொழில்நுட்பக்கல்லூரிகளில், நிரந்தர ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால், பகுதிநேர ஆசிரியர்களைக் கொண்டு, வகுப்புகள் நடத்தப்பட்டு, மாணவர் நலன் காக்கப்படுகிறது. நீதிமன்ற வழக்குகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டபின் 1058 விரிவுரையாளர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டால், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பெரும்பாலான ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிடும்.

தமிழகத்தில் உள்ள 51 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 10 அரசு பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி (பொதுப் பணித்துறை) வட்டம் மற்றும் கோட்டங்களில் 784 அமைச்சுப் பணியாளர்களும், 413 அடிப்படைப் பணியாளர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், 51 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், 462 ஆசிரியரல்லா தொழில்நுட்பப் பணியாளர்கள் இதுவரை பணியமர்த்தப்பட்டுள்ளனர். காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், தமிழகத்தில் உள்ள 10 அரசு பொறியியல் கல்லூரிகளில் 261 ஆசிரியரல்லா தொழில்நுட்பப் பணியாளர்கள் இதுவரை பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
23	52	146	வரும் கல்வியாண்டான 2008–2009 முதல் அண்ணா பல்கலைக்கழகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளின் பாடத்திட்டமும், அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்த பொறியியல் கல்லூரிகளின் பாடத்திட்டமும் ஒரே மாதிரியான பாடத்திட்டமாக அமைய வேண்டுமென்றும், பல்கலைக்கழக ஆட்சிக்குழுவில் (Syndicate) இது குறித்து மிக விரைவில் முடிவு எடுக்கப்பட வேண்டும் என்றும் இது குறித்து உயர்கல்வித் துறைச் செயலாளர் மூலம் குழுவிற்கு உறுதி அளித்தது போல் மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			2008–2009 ஆம் கல்வியாண்டு முதல் புதிய பாடத்திட்டம் பல்கலைக்கழகத் துறைகளுக்கும், பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்ட கல்லூரிகளுக்கும் உருவாக்கப்பட்டு 11 வது கல்விக்குழு கூட்டத்தில் இதற்கான முடிவும் எடுக்கப்பட்டுள்ளது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
24	53	147	மாணவர்களின் நலன் காக்கும் வகையில் இத்தகைய நேர்வில் காலதாமதம் எதுவும் ஏற்படக் கூடாது என்றும் விரைவிலேயே உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்றும் குழு மேலும் பரிந்துரை செய்கிறது. இதில் தவிர்க்கப்படக்கூடிய காலதாமதம் ஏற்படுமாயின் பதிவாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			இனிவரும் காலங்களில் மாணவர் நலன் பாதிக்காத வகையில் இந்நோக்கம் தனிக்கவனம் செலுத்தப்படும்.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
25	54	150	மாநிலத்தில் உள்ள அநேக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் இதர அரசு கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் கட்டடங்கள் மிகவும் பழமையானதாகவும், 25 ஆண்டுகளுக்கு மேலானவையாகவும் உள்ளதால், பள்ளிகளைப் போல, அரசு கல்லூரிகளுக்கும் கட்டடங்கள் மற்றும் இதர வசதிகள் செய்து தர நபார்டு வங்கியினை உயர்மட்ட அலுவலர்களின் மூலம் தொடர்பு கொண்டு நிதியுதவியினைப் பெற துறை தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			2007-2008 ஆம் நிதியாண்டில் 542 கூடுதல் வகுப்பறைகள் கட்டவும் 42 கூடுதல் ஆய்வகங்கள் கட்டவும் அரசால் ஆணைகள் வழங்கப்பட்ட கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் நிதியாண்டில் அரசாணை (நிலை) எண்.11 உயர்கல்வி(டி1) துறை, நாள் 07.01.2009. அரசாணை வாயிலாக 520 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 5 கூடுதல் ஆய்வகங்களும் கட்டுவதற்கு அரசாணை வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகளும் முடிவடைந்து பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/எ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
26	55	153	சுயநிதி கல்லூரிகளில் கல்விக் கட்டணம் செலுத்தி படிக்க இயலாத ஏழை எளிய மாணவர்கள் அதிகளவில் பயன்பெறும் வகையில், அரசு பொறியியற் கல்லூரிகளில் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கையை உயர்த்தும் கருத்துருவிற்கு விரைந்து ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	2011–2012–ஆம் கல்வியாண்டு வரை 6 அரசு பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டு வந்தன. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அறிவிப்பின்படி, 2012–2013–ஆம் கல்வியாண்டில், தேனி மாவட்டம் – போடிநாயக்கனூரில் ஒரு அரசு பொறியியல் கல்லூரியும், 2013–2014–ஆம் கல்வியாண்டில், திருச்சி மாவட்டம் – முசிறங்கம், தருமபுரி மாவட்டம் – செட்டிக்கரை மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் – செங்கிப்பட்டி ஆகிய இடங்களில் 4 புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், ஒவ்வொரு வருடமும், 3900 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் சேர்க்கை இடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/எ2/2008 நாள் 27.8.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
27	56	156	பாலிடெக்னிக் மற்றும் ஐ.டி.ஐ. பயிலகங்களில் படிக்கும் மாணவர்கள் படிப்பினூடே சிறப்புப் பாடங்களையும் கற்று தேர்ச்சி பெற்று தமது திறமையினை வளர்த்துக் கொள்ள உதவும் வகையில் உரிய நடவடிக்கையினை தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் எடுக்கவேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
பட்டயப்படிப்பு படிக்கும் மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்பு பெறுதலுக்கான திறனை அதிகரிக்கச் செய்யவும், தொழிற்சாலைகளின் தற்கால எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு திறனை மேம்படுத்த தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக்கழகத்தின் Madras Institute of Technology, Chrompet வளாகத்தில், திறன் மேம்பாட்டு சிறப்பு பயிற்சி மையம் (Centre of Excellence for Skill Development) ஒன்றும் மற்றும் ஐந்து பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்கள் (Technical Skill Development Institutes) M/s.SIEMENS மற்றும் DESIGN TECH LTD என்ற தொழில் நிறுவனங்களுடன் இணைந்து ரூ.546 கோடியே 84 லட்சம் நிதி மதிப்பீட்டில் துவங்கப்பட்டுள்ளது. மேலும், கனடா இந்தியா கூட்டுப் பயிலகத் திட்டம் மூலம் பட்டயப் படிப்பு மாணாக்கர்களின் திறனை வளர்க்கும் பொருட்டு குறுகிய கால பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

இணைப்பு – 3

மேலும் தொடர விரும்பும் பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	1	7	வால்பாறையில் அரசு கலைக் கல்லூரிக் கட்டடத்திற்காக ரூ.50.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றும், இக்கல்லூரிக் கட்டடத்திற்குத் தேவையான ரூ.5.50 கோடி நிதி, இந்த நிதி ஆண்டிலேயே (2008–2009) நிதித்துறை மூலம் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	வால்பாறை, பாரதியார் பல்கலைக் கழகத்தின் உறுப்பு கல்லூரியான கலை, அறிவியில் கல்லூரிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவது தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து முதற்கட்டமாக ரூ. 50.00 இலட்சம் மதிப்பில் முதல் தளத்துடன் கூடிய கட்டுமானப் பணிகள் முடிவுற்றது. மேலும், அரசின் பங்களிப்பாக மேலும் கூடுதல் நிதியாக ரூ. 1.50 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. (அரசாணை(நிலை) எண். 26, உயர்கல்வித்(டி1) துறை, நாள் 23.01.2009) (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	உயர்கல்வித் துறையின் அரசாணை எண் 26, நாள் 23.1.2009–இன் படி 2.50 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுற்றுச்சுவர் உட்பட அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டனவா என்பது குறித்து ஓர் அறிக்கை குழுவிற்கு அனுப்பிவைக்கப்பெற குழு விரும்புகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2	2	8	கட்டடப்பணிகளில் ஏற்படும் காலதாமதம் மற்றும் கட்டுமானப் பொருள் விலையேற்றம் போன்றவற்றின் காரணமாக கல்லூரிக் கட்டடத்திற்கான மதிப்பீட்டுத் தொகை அதிகரிக்கும் என்பதால் வால்பாறை கல்லூரிக் கட்டடப் பணிக்கு நிதி ஒதுக்குவதற்கு நிதித்துறை முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
வால்பாறை, பாரதியார் பல்கலைக் கழகத்தின் உறுப்பு கல்லூரியான கலை, அறிவியல் கல்லூரிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவது தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து முதற்கட்டமாக ரூ. 50.00 இலட்சம் மதிப்பில் முதல் தளத்துடன் கூடிய கட்டுமானப் பணிகள் முடிவுற்றது. மேலும், அரசின் பங்களிப்பாக மேலும் கூடுதல் நிதியாக ரூ. 1.50 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு இக்கல்லூரிகளின் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. (அரசாணை(நிலை) எண். 26, உயர்கல்வித்(டி1) துறை, நாள் 23.01.2009) (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	குழுவின் பரிந்துரையின்படி கூடுதல் நிதி பெறப்பட்டதா என்பதை அறிய குழு விழைகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	3	10	பெரம்பலூர், மேட்டூர் மற்றும் ஓரத்தநாடு ஆகிய அரசுக் கல்லூரிகளுக்கு கட்டடங்கள் கட்டித்தரப்படுவதற்கான பணிகள் உடனடியாக துவங்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளை துறை மேற்கொள்ள வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
பெரம்பலூரில் உள்ள பாரதிதாசன் பல்கலைக் கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு ரூ.1.05 கோடி மதிப்பிலான சொந்தக் கட்டிடப் பணி நிறைவடைந்துள்ளது. மேலும் ரூ.99.00 இலட்சம் மதிப்பிலான கட்டுமானப் பணிகள் கட்டி முடிக்கப்பட்டு கல்லூரி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேட்டூர், பெரியார் பல்கலைக் கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு சொந்த கட்டிடம் கட்ட தேவையான ரூ. 270.00 இலட்சத்தில் ரூ. 170.00 இலட்சத்தை தொடர்புடைய பல்கலைக்கழகமே ஏற்கும் நிலையில் எஞ்சிய ரூ. 100.00 இலட்சத்தில் ரூ. 50.00 இலட்சத்தை அரசு நிதியாக அளிக்கவும், மீதத்தை பல்கலைக்கழகமோ அல்லது இதர வகைகளிலோ மேற்கொள்ள அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஒரத்தநாடு, பாரதிதாசன் பல்கலைக் கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு தேவைப்படும் தொகையில் ரூ.260.00 இலட்சத்தில் பல்கலைக்கழக பங்களிப்பாக ரூ. 130.00 இலட்சமும் அரசின் பங்களிப்பாக எஞ்சிய ரூ. 130.00 இலட்சமும் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டு, கட்டிடப்பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது. (அரசாணை(நிலை) எண். 23, உயர்கல்வித்(டி1) துறை, நாள் 21.01.2009) (அரசாணை(நிலை) எண். 146, உயர்கல்வித்(டி1) துறை, நாள் 26.05.2009) (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	மேட்டூர், பெரியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான தொகையில் ரூ.50 இலட்சம் பல்கலைக் கழகமோ அல்லது இதர வகைகளிலோ மேற்கொள்ளப்படவேண்டும் என்ற நிபந்தனையோடு அரசாணையில் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தும், கட்டடப்பணி முடிக்கப்பெற்று தற்போது பயன்பாட்டில் உள்ளதா என குழுவிற்கு ஓர் அறிக்கை அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என்று குழு விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
4	31	82	திருப்பூர், எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரியில் மாணவிகள் அமர்ந்து மதிய உணவு அருந்தும் வகையில் பராமரிப்பு நிதியிலிருந்து விரைவாக அறைகள் கட்டித்தரப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
திருப்பூர், எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரியில் மாணவிகள் அமர்ந்து மதிய உணவு அருந்தும் வகையில் கல்லூரி பராமரிப்பு நிதியிலிருந்து அறைகள் கட்டித் தருவது தொடர்பாக கல்லூரி முதல்வரிடமிருந்து கருத்துரு எதுவும் பெறப்படவில்லை. கருத்துரு பெறப்படின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/ஏ2/2008 நாள் 27.8.2019)	குழுவின் பரிந்துரையை கருத்துருவிற்கான குறிப்பாக வைத்து உரிய நடவடிக்கையை துறை எடுத்திருக்க வேண்டும் எனக் குழு கருதுகிறது. பேரவையில் வைக்கப்பெற்ற அறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரை மீது நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	43	109	தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ஏற்கனவே உள்ள கூடலரங்கத்தை விரிவாக்கம் செய்து தர வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரியில் கூடலரங்கம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. விரிவாக்கம் செய்வது தொடர்பாக கல்லூரி முதல்வரிடமிருந்து கருத்துரு வரப்பெறின் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (உயர்கல்வித் துறையின் கடித எண்.12233/எ2/2008 நாள் 27.8.2019)	தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் உள்ள கூடலரங்கத்தை விரிவாக்கம் செய்து தர குழு பரிந்துரை செய்துள்ளது. இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கி. சீனிவாசன்,
செயலாளர்.